# அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது, சென்னை

## காலி பணியிட அறிவிப்பு எண் 01/SETC/2023

கீழ்க்கண்ட காலி பணியிடங்களுக்கு அடிப்படை தகுதிகளை பூர்த்தி செய்யும் நபர்களிடமிருந்து நேரடியாக விண்ணப்பங்கள் **www.arasubus.tn.gov.in** என்ற இணையதளம் மூலம் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது, சென்னை. |
| 2. | பதவியின் பெயர் | ஓட்டுநர் உடன் நடத்துநர் |
| 3. | பணிக் காலியிட எண்ணிக்கை | 685 |
| 4. | இன சுழற்சி (பின்னடைவு காலியிடங்கள் உட்பட) (Backlog) | அரசு விதிமுறைகளின்படி நடைமுறைப்படுத்தப்படும். |
| 5. | குறைந்தபட்ச வயது | 01.01.2023 அன்று 24 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும். |
| 6. | வயது | 01.01.2023அன்றுபொதுவகுப்பினர்(OC)40வயதுபூர்த்தியாகாமலும்,பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், சீர் மரபினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் (BC/MBC/DNC/SC/ST) 45 வயது பூர்த்தியாகாமலும் இருத்தல் வேண்டும்.<br>முன்னாள் இராணுவத்தினருக்கு 01.01.2023 அன்று பொது வகுப்பினர் (OC) 50 வயது பூர்த்தியாகாமலும் மற்றும் இதர வகுப்பினர் (BC/MBC/DNC/SC/ST) 55 வயது பூர்த்தியாகாமலும் இருத்தல் வேண்டும். |
| 7. | கல்வித் தகுதி | பத்தாம் வகுப்பு (SSLC) தேர்ச்சி மற்றும் தமிழில் பேசவும், படிக்கவும், எழுதவும் தெரிந்திருத்தல் அவசியம். |
| 8. | முக்கிய தகுதிகள் | செல்லத்தக்க கனரக வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் குறைந்தபட்சம் 18 மாதங்கள் கனரக வாகனம் ஓட்டிய அனுபவம், முதலுதவிச் சான்று, பொதுப் பணி வில்லை மற்றும் செல்லத்தக்க நடத்துநர் உரிமம் 01.01.2023-க்கு முன்னர் பெற்றதாக இருத்தல் வேண்டும். |
| 9. | உயரம் மற்றும் எடை | உயரம் குறைந்தபட்சம் 160 செ.மீ. எடை 50 கிலோகிராம். |
| 10. | உடல் தகுதி (1) | எவ்விதமான உடல் அங்க குறைபாடு (Physical deformity) அற்றவராக இருத்தல் வேண்டும். கண் பார்வைத் திறன் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குள் இருக்க வேண்டும். |
| 11. | உடல் தகுதி (2) | கீழே கண்ட குறைபாடுகள் அற்றவர்களாக இருத்தல் வேண்டும்.<br>1. கண் பார்வைத்திறன் குறைபாடு.<br>2. காது கேட்கும் திறன் குறைபாடு.<br>3. இரவுக் குருடு மற்றும் நிறக்குருடு குறைபாடு.<br>4. வளைந்த கால்கள், முழங்கால்கள் ஒட்டுதல் மற்றும் சமமான பாதங்கள் ஆகிய குறைபாடுகள். |

- சாலை போக்குவரத்து நிறுவனம் மூலம் தேர்ச்சி பெற்றவர்களுக்கு குறைந்தபட்ச வயது 24 மற்றும் 18 மாதங்கள் முன் அனுபவம் ஆகிய நிபந்தனைகள் பொருந்தாது.
- மேலே கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் **www.arasubus.tn.gov.in** என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து வங்கி சேவை கட்டணம் நீங்கலாக SC/ST பிரிவினர் ரூ.**590/-**(18% GST உட்பட) கட்டணமாகவும், வங்கி சேவை கட்டணம் நீங்கலாக இதர பிரிவினர் ரூ.**1180/-** (18% GST உட்பட) கட்டணமாகவும் செலுத்த வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் முறையே எழுத்து தேர்வு, செய்முறைத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலமாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
- விண்ணப்ப கட்டணம் எந்த காரணத்தை முன்னிட்டும் திரும்ப வழங்கப்படமாட்டாது.
- விண்ணப்பதாரர்கள் எழுத்து/செய்முறை/நேர்முகத் தேர்விற்கு வருவதற்கான பயணச்செலவு மற்றும் இதர செலவு தொகை ஏதும் **வழங்கப்படமாட்டாது.**
- இந்நியமனம் தொடர்பாக நடத்தப்படும் எழுத்து/செய்முறை/நேர்முகத் தேர்வு தொடர்பான அனைத்து விபரங்களையும் அறிய **www.arasubus.tn.gov.in** என்ற இணையதளத்தில் பார்வையிடலாம்.
- இணையதளம் மூலம் விண்ணப்ப படிவம் **18.08.2023** மதியம் **01.00 மணி** முதல் **18.09.2023** மதியம் **01.00 மணி** வரை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம். அதன் பிறகு இணைப்பு முடக்கப்படும்.
- இதர விபரங்கள் போக்குவரத்துக் கழக பொதுப்பணி விதிகள் மற்றும் அரசு விதிகளுக்கு உட்பட்டது. தகுதி பெறாதவர்களின் விண்ணப்பங்களை எவ்வித அறிவிப்புமின்றி நிராகரிக்க போக்குவரத்துக் கழகத்திற்கு அதிகாரம் உண்டு.
- சென்னை உயர்நீதிமன்றம் W.P.No.20290 of 2012, நாள்.27.08.2014 மற்றும் W.A.No.1737 of 2014, நாள்.20.06.2019 வழக்கில் பிறப்பித்த உத்தரவு மற்றும் வழிகாட்டுதலின் படி இவ்வறிக்கை வெளியிடப்படுகிறது.
- தேர்வு அனுமதிச் சீட்டு பதிவிறக்கம் மற்றும் தேர்வு நடைபெறும் இடங்கள் பற்றிய விபரங்கள் **www.arasubus.tn.gov.in** என்ற இணைய தளத்தில் அவ்வப்போது பதிவிடப்படும். விண்ணப்பதாரர்கள் இத்தளத்தோடு தொடர்பில் இருக்கவும்.

செ.ம.தொ.இ/946/வரைகலை/2023

**மேலாண் இயக்குநர்,**

**அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தநா வது.,**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."